(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் தேதி அன்றைய அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு மேலவை நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப் பட்டுள்ளது என்பதை அறிவித்துக்கொள்கிறேன் :—

9—7—1977	சனிக்கிழமை ..	அரசின் சட்ட முன்வடிவு, ஆளுநர் உரை மீது விவாதம்.
10—7—1977	ஞாயிற்றுக்கிழமை..	விடுமுறை
11—7—1977	திங்கட்கிழமை ..	ஆளுநர் உரையின்மீது விவாதம்.
12—7—1977	செவ்வாய்க்கிழமை	ஆளுநர் உரையின்மீது விவாதம்.
13—7—1977	புதன்கிழமை ..	ஆளுநர் உரையின்மீது விவாதம்.
14—7—1977	வியாழக்கிழமை..	ஆளுநர் உரையின்மீது விவாதம்.

மேலவை பிற்பகல் 4 மணி முதல் 7 மணி வரை கூடும்.

(4) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்களுக்குக் கடைசி நாள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள், 1977 ஜூலை 11-ம் நாள், திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

(5) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு சட்டமன்ற மேலவையின் இசைவுக்காக மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பப்பட்டுள்ள, தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்களின் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவின் (சட்ட மன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 1/1977) பிரதி ஒன்று மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.